24th January 1964]

Housing Schemes for Tiruchirappalli

* 88 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the details of the Housing Schemes undertaken by the State Housing Board in and around Tiruchirappalli City during 1963 ; and

(*b*) when the acquisition of lands for the Tiruchirappalli East Neighbourhood Scheme would be completed?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) & (*b*) A statement[a] is placed on the table of the House.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், இந்த திட்டங்களில் எது எது தொடங்கி இருக்கின்றன. எது எது ஆரம்பிக்க இருக்கின்றன என்ற விவரங்கள் கொடுக்க முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கல்மண்டை பீச்சாங் குளம் ஸ்லம் இம்ப்ரூவ்மென்ட் ஸ்கீம் இப்பொழுது நிறைவேற்றப் பட்டுக்கொண்டு வருகிறது ; ரெண்டல் ஹௌசிங் ஸ்கீம் சம்பந்தப் பட்டவரை டெண்டர்ஸ் கூப்பிடப்பட்டு இருக்கிறது; லோ இன்கம் க்ரூப் ஹௌசிங் ஸ்கீம் ப்ராஜக்ட் தயார் செய்துகொண்டு இருக்கிறார்கள்; மிடில் இன்கம் க்ரூப் ஹௌசிங் ஸ்கீம் சம்பந்த மாக டென்டர்கள் கால் பண்ணி இருக்கிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், இரண்டாவது ஐடமாகக் கொடுக்கப்பட்டு இருக்கும் நில ஆர்ஜித அபிவிருத்தித் திட்டங் கள், பல்க் அக்விஸிஷன் ஸ்கீமில் 500 ஏக்கர் நில ஆர்ஜிதம் செய்து மனைகட்டுகளாக கட்டி பட்டிணமாக அபிவிருத்தி செய்ய திட்டப்பட்டிருந்த திட்டம் எந்த நிலையில் இருக்கிறது? அதை ஒத்திவைப்பதற்கு காரணம் என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : திட்டம் இருக்கிறது; திட் டம் ஒத்தி வைக்கப்படவில்லை. இடத்தைத் தான் மாற்றப் போகிறோம்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், மாற்று இடம் பார்க்கும் வேலை முடிவாகிவிட்டதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மாற்று இடம் நிர்ணயிப் பது பற்றி கலெக்டருக்கு இரண்டு மூன்று மாதத்திற்கு முன்பே அறிவித்திருக்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், ஏற்கனவே உத்தேசித் திருந்த இடத்தை கைவிட வேண்டிய காரணம் என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த இடம் 200 அல்லது 250 ஏக்கரா நிலம் கொண்ட வாழைத் தோட்டமாக இருக்கிறது. அந்த இடத்திலே இருந்து தான் இன்றைக்கு திருச்சிக்கு

---

[a] Printed as Appendix II on pages 105–107

[24th January 1964

வேண்டிய வாழைக்காய்கள், காய்கறிகள் வந்து கொண்டிருக்கின்றன. சர்க்காருடைய கொள்கை வெட்லாண்ஸ்-ஐ ஆர்ஜிதம் செய்வது இல்லை என்பது தான். அதோடு இவ்வளவு முக்கியமான வாழைத் தோட்டத்தை எடுத்து வீடு கட்டுவது உசிதம் இல்லை, ஆகவே வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் என்ற முடிவு எடுக்கப்பட்டது. அது போன்ற ஒரு வாழைத் தோட்டம் மறுபடியும் வளர்க்க வேண்டுமானல் குறைந்தது 30, 40 வருஷங்கள் ஆகும்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: சார், இதன் காரணமாக திட்டத்தை குறைக்காமல் இருப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: முன்பு இருந்ததைவிட சற்று விரிவான ஒரு திட்டத்தையே தயார் செய்துகொண்டு இருக்கிறோம்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: சார், விரிவான மனைக்கட்டு திட்டம் வரும் என்பதில் சந்தோஷம். ஒன்று கேட்க விரும்புகிறேன். இப்படி விடப்பட்ட இடத்தில் உள்ள தோட்டம் வாழை சாகுபடிக்கே உபயோகப்படும் நிலமாக இருக்கும் என்று உத்தரவாதம் கொடுக்கமுடியுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் சபாநாயகர் அவர்களே, தனியார் தங்கள் சொத்தை அழித்துக் கொண்டால் அதை சர்க்கார் தடுக்க முடியாது. ஆனல் சர்க்காரே சென்று விளை பொருள்கள் மகசூல் செய்யும், உணவுப் பொருள்கள் உற்பத்தி செய்யப்படும் நிலங்களை ஆர்ஜிதம் செய்யக்கூடாது என்பதுதான் சர்க்காரின் கொள்கை.

திரு. மீ. கலியாணசுந்தரம்: இன்னும் கேள்விகள் கேட்டுக் கொண்டே போனல் வளர்ந்து கொண்டே போகும். மன்னிக்க வேண்டும்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கேள்விகள் கேட்கவேண்டியதுதான். அங்கத்தினர் கேட்கட்டும்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: சார், அது தனியார் சொத்தாக இருக்கலாம். ஆனல் அது சமுதாயத்திற்கு அவசியம் என்று முன்னல் அமைச்சர் அவர்களே சொன்னர்கள், அவசியமான வாழைக்காய் முதலியவை உற்பத்தி ஆகின்றன என்று . . . . .

கனம் சபாநாயகர்: தனியார் உரிமையில் எப்படி இண்டர்பியர் பண்ண முடியும்?

திரு. மீ. கலியாணசுந்தரம்: இதில் வேறு விஷயம் இருக்கிறது, சொல்கிறேன். சிலர் ஆட்சேபணை செய்தார்கள் என்று இடத்தை மாற்றி விட்டார்கள். இன்றைக்கு திருவரம்பூரிலே பாய்லர் பிளாண்ட் வந்து, புதிய பாலம் கட்டி ரஸ்தா போட்டிருப்பதன் காரணமாக நிலத்தின் மதிப்பு பல மடங்கு அதிகரித்திருக்கிறது. இன்றைக்கு அங்கே ஏகரா ஒன்று ஒரு லட்ச ரூபாய்க்கு உயர்ந்திருக்கிறது. அரசாங்கம் எடுத்துக்கொண்டு நஷ்ட ஈடு கொடுத்

24th January 1964]

தால் ரூபாய் 10,000 தான் ஒரு ஏகராவுக்கு கொடுப்பார்கள். இந்த காரணத்தினால்தான் அந்த இடம் கைவிடப்பட்டது என்பது உண்மையா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: முற்றிலும் தவறு. யார் அந்த நோக்கத்தை அங்கத்தினர்களுக்கு சொன்னார்களோ. சர்க்காரைப் பொறுத்தவரையில் வெட் லாண்டுகளை ஆர்ஜிதம் செய்யக் கூடாது என்ற கொள்கையின் அடிப்படையில்தான் அந்த இடத்தைக் கைவிட்டோம்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: நான் சொன்னதா, அல்லது எது தவறு என்று அமைச்சர் அவர்கள் சொல்லவில்லை. அது இருக்கட்டும். அரசாங்க ஊழியர்களுக்கு கட்டடம் கட்டும் திட்டம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அதற்கான தனி திட்டம் இருக்கிறது. சர்க்கார் ஊழியர்களுக்கென கட்டடம் கட்ட மத்திய சர்க்காரால் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. திட்டம் ஒன்று பத்து ஏக்கரா அளவில் செய்யப்படுகிறது. எது தவறு என்று கனம் அங்கத்தினர்கள் கேட்டார்கள். யாருக்கோ உதவி செய்ய கைவிட்டோம் என்று அவர்கள் குற்றச்சாட்டு சொன்னார்களே அது வேண்டும் என்றே யாரோ புகார் சொல்லியிருக்கிறார்கள் அவர்களிடம், என்று சொன்னேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: அமைச்சர் அவர்கள் சொல்வது சரியல்ல . . . .

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: "சரியல்ல", "சரியல்ல" என்று சொன்னால் அது கேள்வியாகாது. கேள்வியைப்போடுங்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: நான் பர்ஸனல் எக்ஸ்ப்ளனேஷன் செய்ய வேண்டும் . . . .

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: "யார் தவறு என்று சொல்லவில்லை" என்று சொன்னார்கள்; அதற்கு அவர்களுக்கு பதில் சொன்னேன்.

கனம் சபாநாயகர்: கனம் அங்கத்தினர் கேள்வியைக் கேட்கலாம்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: இடத்தை மாற்றுவது பற்றி ஆட்சேபணை இல்லை. புதிய இடத்தை தேர்ந்து எடுத்தாலும் பழைய வசதிகள் இருக்கும் என்று எடுத்துக் கொள்ளலாமா?

கனம் சபாநாயகர்: விரிவான திட்டம் வருகிறது என்றுதான் சொன்னார்களே.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ஆம், முன்பே சொன்னேன் விரிவான திட்டம் தயாரித்துக்கொண்டிருக்கிறோம் என்று. இன்னும் இந்த இடத்தில் அதிகமாக விஸ்தரிக்க வசதிகள் இருக்கின்றன; அந்த இடத்தில் அப்படியில்லை. புதிதாக தேர்ந்தெடுக்கும் இடம் வருங்காலத்தில் மேற்கொண்டும் 500 ஏக்கர் வரை விஸ்தரிக்க வசதிகள் உள்ள இடமாக தேர்ந்தெடுக்கப்படும்.